Australian Government
Department of Home Affairs

# பாதுகாப்பு விசா குறித்த முக்கியமான தகவல்கள்

இந்தத் தகவல் மற்ற மொழிகளில் கிடைக்கிறது. அதைப் பின்வரும் இணையதளத்தில் பார்க்கவும்: Australia’s protection obligations (homeaffairs.gov.au)

## பாதுகாப்பு விசாக்கள்

பாதுகாப்பு விசாக்கள் என்பது மக்கள் (அல்லது அவர்களது குடும்ப உறுப்பினர்கள்) தங்கள் சொந்த நாட்டுக்குத் திரும்பினால், குறிப்பிடத்தக்க துன்பத்துக்குள்ளாகும் உண்மையான அபாயத்தை எதிர்கொள்ளக்கூடிய அல்லது பின்வருவனவற்றின் அடிப்படையில் கொடுமைப்படுத்தப்படும் உண்மையான வாய்ப்பு உள்ளவர்களுக்கானது:

- இனம்
- மதம்
- தேசிய இனம்
- ஒரு குறிப்பிட்ட சமூகக் குழுவில் அங்கத்துவம் அல்லது
- அரசியல் கருத்து.

நீங்கள் பாதுகாப்பு விசாவிற்கு விண்ணப்பிக்கும் போது, நீங்கள் உங்கள் சொந்த நாட்டிலிருந்து ஆஸ்திரேலியாவில் புகலிடம் கோருகிறீர்கள்.

பாதுகாப்பு விசா என்பது ஆஸ்திரேலியாவில் நீண்ட காலம் தங்கி வேலை செய்ய விரும்புபவர்களுக்கானது அல்ல.

நீங்கள் பாதுகாப்பு விசாவிற்கு விண்ணப்பித்தால், பின்வருவனவற்றில் ஏதாவது ஒன்றோ அல்லது இரண்டுமோ உண்மை என்று அறிவிக்கிறீர்கள்:

- குறிப்பிடத்தக்க துன்பத்துக்குள்ளாகும் உண்மையான அபாயத்தையோ அல்லது கொடுமைப்படுத்தப்படும் உண்மையான வாய்ப்பையோ எதிர்கொள்ளாமல் நீங்கள் தாயகத்திற்குச் செல்ல முடியாது.
- நீங்கள் அத்தகைய கோரிக்கைகளை எழுப்பியுள்ள ஒருவரின் குடும்ப உறுப்பினர்.

நீங்கள் (உங்கள் சொந்த நாட்டைத் தவிர) மற்றொரு நாட்டில் சட்டப்பூர்வமாக நுழைந்து குறிப்பிடத்தக்க துன்பத்துக்குள்ளாகும் உண்மையான அபாயத்தையோ அல்லது கொடுமைப்படுத்தப்படும் உண்மையான வாய்ப்பையோ எதிர்கொள்ளாமல் நீங்கள் பாதுகாப்பாக வாழ முடிந்தால், அத்துடன் அந்த நாடும் குறிப்பிடத்தக்க துன்பத்துக்குள்ளாகும் உண்மையான அபாயத்தை எதிர்கொள்ளக்கூடிய அல்லது

கொடுமைப்படுத்தப்படும் உண்மையான வாய்ப்பு இருக்கும் மற்றொரு நாட்டிற்கு உங்களை திருப்பி அனுப்பாமல் இருந்தால், உங்களுக்குப் பாதுகாப்பு விசா வழங்கப்படாது. உங்களுக்கு ஆஸ்திரேலியாவில் உண்மையிலேயே புகலிடம் தேவைப்பட்டால் மட்டுமே நீங்கள் பாதுகாப்பு விசாவிற்கு விண்ணப்பிக்க வேண்டும்.

உங்களுக்கும் உங்கள் சூழ்நிலைக்கும் மிகவும் பொருத்தமான மற்ற விசாக்கள் இருக்கலாம். மற்ற விசாக்கள் பற்றி அறிந்துகொள்ள பின்வரும் இணையதளத்துக்குச் செல்லவும்: Explore visa options (homeaffairs.gov.au).

# உங்கள் பாதுகாப்பு விசா விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டால் என்ன நடக்கும்?

உங்களுக்கான பாதுகாப்பு விசா மறுக்கப்பட்டால், நீங்கள் பெரும்பாலான மற்ற விசாக்களுக்கு விண்ணப்பிக்க முடியாது, மேலும் நீங்கள் செல்லுபடியாகும் விசா ஒன்றை வைத்திருக்கவில்லை என்றால் ஆஸ்திரேலியாவை விட்டு வெளியேற வேண்டும். உங்களிடம் செல்லுபடியாகும் விசா ஒன்று இல்லையென்றால், நீங்கள் தடுத்து நிறுத்தப்பட்டு ஆஸ்திரேலியாவில் இருந்து வெளியேற்றப்படலாம்.

நீங்கள் தடுத்து நிறுத்தப்பட்டு ஆஸ்திரேலியாவில் இருந்து வெளியேற்றப்பட்டால், உங்களை வெளியேற்றுவதற்கான செலவை நீங்கள் திருப்பிச் செலுத்த வேண்டியிருக்கும். இது ஆயிரக்கணக்கான டாலர்களாக இருக்கலாம்.

நிராகரிக்கப்பட்ட பாதுகாப்பு விசா விண்ணப்பம் உங்கள் குடிவரவுப் பதிவேட்டில் வாழ்நாள் முழுவதும் இருக்கும். எதிர்காலத்தில் நீங்களும் உங்கள் குடும்பத்தினரும் ஆஸ்திரேலியாவுக்கு வருகை புரிவதை இது கடினமாக்கலாம். நிராகரிக்கப்பட்ட பாதுகாப்பு விசாவானது, ஆஸ்திரேலியாவிற்கு வெளியே உள்ள பிற நாடுகளுக்கான உங்களின் எதிர்கால விசா விண்ணப்பங்களையும், நீங்கள் விண்ணப்பிக்கும் விசா வகையைப் பொறுத்துப் பாதிக்கக்கூடும்.

# பாதுகாப்பைக் கோரும்போது உங்கள் பொறுப்புகள்

உள்துறைத் திணைக்களம் (Department of Home Affairs) முடிவெடுப்பதற்கு முன், பாதுகாப்புக்கான உங்கள் கோரிக்கையின் விவரங்களையும், மற்றும் அதற்கான கூடுதல் சான்றுகளையும் வழங்கும் பொறுப்பு உங்களைச் சார்ந்ததாகும்.

ஆஸ்திரேலியாவில் உங்களுக்கு ஏன் பாதுகாப்பு தேவை என்பதை நீங்கள் தெளிவாக விளக்கி, கூடிய விரைவில் முழுமையான மற்றும் துல்லியமான தகவல்களைத் திணைக்களத்திற்கு வழங்க வேண்டும்.

பாதுகாப்பு விசாவிற்கான விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் போது, வேறு யாரேனும் உங்களுக்காக விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து சமர்ப்பித்தாலும், நீங்கள் வழங்கும் அனைத்துத் தகவல்களும் உண்மையாகவும் துல்லியமாகவும் இருப்பதை உறுதி செய்வது உங்கள் பொறுப்பாகும்.

நீங்கள் எதற்காக விண்ணப்பிக்கிறீர்கள் மற்றும் விண்ணப்பத்தில் என்ன தகவல் கொடுக்கப்பட்டுள்ளது என்பதைப் புரிந்து கொள்ளாமல் உங்களுக்கான பாதுகாப்பு விசாவிற்கு விண்ணப்பிக்க யாரையும் நீங்கள் அனுமதிக்கக் கூடாது.

நீங்கள் ஆஸ்திரேலியாவில் பதிவு செய்யப்பட்ட புலம்பெயர்வு முகவர் அல்லது ஆஸ்திரேலிய வழக்குரைஞரைப் பயன்படுத்தினாலும், சரியான விசா வகைக்கு நீங்கள் விண்ணப்பித்திருப்பதை உறுதிசெய்வதற்கும் உங்கள் விசா நிபந்தனைகளைப் பின்பற்றுவதற்கும் நீங்கள்தான் பொறுப்பாவீர்கள்.

பதிவு செய்யப்பட்ட புலம்பெயர்வு முகவர்கள் உள்துறைத் திணைக்களத்தின் (Department of Home Affairs) இணையதளத்தில் பட்டியலிடப்பட்டுள்ளனர். steps to choose a migration agent (mara.gov.au) பின்பற்றவும்.

# தவறான கோரிக்கைகளுக்கு அபராதம்

பாதுகாப்பு விசாவிற்கு விண்ணப்பிக்கும் போது விண்ணப்பதாரர்கள் ஒரு உறுதிமொழி கொடுக்க வேண்டும்.

பொய்யான அல்லது தவறாகத் திசைதிருப்பும் தகவல்களை வழங்குவது ஆஸ்திரேலியாவில் கடுமையான குற்றமாகும், அத்துடன் நீங்கள் குற்றவியல் தண்டனைகளையும் எதிர்கொள்ளக்கூடும்.

விசா விண்ணப்பத்தில் பொய்யான அல்லது தவறாகத் திசைதிருப்பும் தகவல்களை வழங்கும் நபருக்கு மிகப்பெரிய அபராதம், 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை அல்லது இரண்டுமே விதிக்கப்படலாம்.

உங்களுக்கு விசா வழங்கப்பட்ட பிறகு நீங்கள் பொய்னான அல்லது தவறாகத் திசைதிருப்பும் தகவலை வழங்கியிருப்பது கண்டறியப்பட்டால், உங்கள் பாதுகாப்பு விசா இரத்து செய்யப்படலாம்.

# இலவச சட்ட ஆலோசனை கிடைக்கும்

நீங்கள் பாதுகாப்பு விசாவிற்கு விண்ணப்பிப்பதற்கு முன், உங்கள் மாநிலம் அல்லது பிரதேசத்தில் உள்ள சிறப்பு அகதிகள் மற்றும் குடியேற்ற சட்ட வழங்குநரிடமிருந்து free legal advice பெற நீங்கள் பலமாக ஊக்குவிக்கப்படுகிறீர்கள்.

இந்தச் சேவை வழங்குநர்கள் பின்வரும் வகையில் உங்களுக்கு உதவமுடியும்:

- நீங்கள் பாதுகாப்பு விசாவிற்கு தகுதியுடையவரா அல்லது வேறு பொருத்தமான விசாவிற்கு தகுதியுடையவரா என்பதைக் கண்டறிதல்
- விண்ணப்பச் செயல்முறையை புரிந்து கொள்ளுதல்
- பாதுகாப்பு விசா நிராகரிப்பின் விளைவுகளைப் புரிந்து கொள்ளுதல்
- தேவைப்பட்டால் பாதுகாப்பு விசா விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்தல் மற்றும் பதிவு செய்தல். .

நீங்கள் உங்கள் மாநிலம் அல்லது பிரதேசத்தில் உள்ள சட்ட உதவி அல்லது சமூகச் சட்ட மையத்திலிருந்தும் இலவச சட்ட உதவியைப் பெறலாம்.